**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI**

**Deposition of Witnesses for P.W.2 in MCOP.No. 321/2023**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்து | தந்தை / கணவர் பெயர் | : பெரியசாமி |
| கிராமம் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |

Solemnly affirmed accordance with the provisions of the Act of 1973 of the day of 13.03.2026.

மனுதாரர் தரப்பு 2வது சாட்சி முத்து என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.ஆறுமுகம், கிரேடு-2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.(மேற்படி சாட்சி மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.)

கால அவகாசம் கொடுக்கப்பட்டும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு வாகனங்களும் எதிரெதிரே மோதிக்கொண்டது என்று சொன்னால் சரிதான். தாவா விபத்து சம்மந்தமாக நடராஜன் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் போலிசார் என்னை சாட்சியாக சேர்க்கவில்லை. விபத்தில் இறந்துபோனவர் எனக்கு மைத்துனன் முறை ஆவார். காவல் துறையினர் தாக்கல் செய்த குற்ற வழக்கில் நான் சாட்சியாக இல்லாததால் விபத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இறந்தவர் எனது உறவினர் என்பதால் இறந்தவரின் குடும்பத்திற்கு அதிகப்படியான இழப்பீடு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- முத்து

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.